பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
07 06 2025 12 40
சனிக்கிழமை பிற்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. விவசாயிகளின் நலனுக்கான திட்டங்களை மத்திய அரசு தொடர்ந்து செயல்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வேளாண் கடன் அட்டை திட்டத்தின்கீழ் 5 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தொடர்ந்து தவறான தகவல்களை தெரிவித்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல் முருகன் மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

4. தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு முழு ஆதரவு அளிக்கப்படும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

5. ஆசியக்கோப்பைக்கான மகளிர் ஐஸ் ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்று வரலாற்றுச்சாதனை படைத்துள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

விவசாயிகளின் நலன்களை பாதுகாப்பதற்கான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மத்தியில் பிஜேபி அரசு பொறுப்பேற்ற பின்னர், கடந்த 11 ஆண்டுகளில் வேளாண் துறையின் வளர்ச்சிக்காகவும், விவசாயிகளின் நலனுக்காகவும் செயல்படுத்திய திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

மண்வளம், பாசன வசதி போன்றவற்றிற்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து திட்டங்களை செயல்படுத்தியதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, வேளாண் துறை சீரான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>><><><><<

வேளாண் கடன் அட்டை திட்டத்தின் மூலம் விவசாயிகள் பெரிதும் பயனடைந்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த திட்டத்தின்கீழ் குறைந்த வட்டியில் குறித்த காலத்தில் கடனுதவிகளை விவசாயிகள் பெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தின்கீழ் இதுவரை 4 கோடியே 65 லட்சம் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

5 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு 4 சதவீதம் என்ற குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

>><><><><<

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தொடர்ந்து தவறான தகவல்களை தெரிவித்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல் முருகன் மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - முருகன் 1- 43 செகண்ட்ஸ்)

திமுக அரசின் நிர்வாக தோல்வியை மறைப்பதற்காகத்தான் தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை குறை சொல்வதை வாடிக்கையாக வைத்திருப்பதாகவும் திரு எல் முருகன் கூறினார்.

(சவுண்ட் பைட் - முருகன் 2 - 49 செகண்ட்ஸ்)

>><><><><<

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு அமெரிக்கா முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துரைப்பதற்காக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர் திரு சசிதரூர் தலைமையிலான குழு அமெரிக்க வெளியுறவுத் துறை துணை அமைச்சர் திரு கிறிஸ்டோபர் லாண்டுவை நேற்று வாஷிங்டனில் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டது.

இந்த சந்திப்பின் போது பஹல்காம் தாக்குதல் சம்பவம் குறித்தும் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், தீவிரவாதிகள் மற்றும் தீவிரவாத முகாம்கள் குறிவைத்து நடத்தப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் குறித்தும் இக்குழுவினர் எடுத்துரைத்தனர்.

இந்த சந்திப்பின்போது இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு முழு ஆதரவு தெரிவிப்பதாக திரு கிறிஸ்டோபர் லாண்டு கூறினார்.

>><><><><<

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு பன்மடங்கு அதிகரித்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு முக்தார் அப்பாஸ் நக்வி, பிரதமர் மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக நாடுகள் அனைத்தும் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்து வருவதாகவும் அவர் கூறினார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு பின்பற்றி வரும் வெளியுறவுக் கொள்கைகளே இதற்கு காரணம் என்றும் திரு முக்தார் அப்பாஸ் நக்வி தெரிவித்தார்.

>><><><><<

பக்ரீத் பண்டிகை இன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனையொட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உட்பட தலைவர்கள் பலர் வாழ்த்துச் செய்தி விடுத்துள்ளனர்.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் நடைபெற்ற சிறப்பு தொழுகைகளில் ஏராளமான இஸ்லாமியர்கள் பங்கேற்றனர்.

>><><><<

வறுமையை அகற்றுவதில் இந்தியா பெரிய அளவில் முன்னேற்றத்தை எட்டியுள்ளதாக உலக வங்கி கூறியுள்ளது.

2011ஆம் ஆண்டு தொடங்கி, கடந்த நிதியாண்டு வரை 26 கோடியே 90 லட்சம் பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக அந்த வங்கி தெரிவித்துள்ளது.

இந்த காலகட்டத்தில் வறுமையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 27 புள்ளி ஒரு சதவீதத்திலிருந்து 5 புள்ளி 3 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் அந்த வங்கியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உத்தரப்பிரதேசம், மஹாராஷ்ட்ரா, பீகார், மேற்குவங்கம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வறுமையை அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் நல்ல முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><<

நாடுமுழுவதும் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் மத்திய அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கிலும், விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து எடுத்துரைப்பதற்காகவும் இந்த இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில நாள்தோறும் 3 கிராமங்களில் இந்த இயக்கம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஜெகதாம்பாள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஜெகதாம்பாள் 30. செகண்ட்ஸ்)

இந்த இயக்கம் தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 41 செகண்ட்ஸ்)

>><><><><<

மகாராஷ்டிரா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதேபோல் ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, சத்தீஸ்கர், ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் வரும் 10 ஆம்தேதிவரை மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்திற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இருதினங்களில் மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, அசாம் மாநிலத்தில் 18 மாவட்டங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக 4 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பகுதிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பைக்கான மகளிர் ஐஸ் ஹாக்கி போட்டியில், இந்தியா வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா – கிர்கிஸ்தானை வென்றது.

இதன்மூலம், ஐந்து ஆட்டங்களில் பங்கேற்று, ஏழு புள்ளிகளை வென்ற இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-----------

**Taiwan** ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Jyoti Yarraji** இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் 100 மீட்டர் தடை ஓட்டப்பிரிவின் தொடக்கச் சுற்றில் வெற்றி பெற்றதை அடுத்து அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-----------

புரோ லீக் ஹாக்கி போட்டியில் இந்தியா – நெதர்லாந்து இடையேயான முதலாவது ஆட்டம் இன்று **Amstelveen–**ல் நடைபெறுகிறது.

---------------

ஸ்பெயின் ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் பாலசுப்பிரமணியன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>> <<**